**<u>செங்கோட்டை நகர்மன்றத்தின் சாதாரண கூட்டம் 29.08.2022 அன்று காலை 11.00 மணிக்கு நடைபெற்றதின் நடவடிக்கைகள்</u>**

**மன்றப் பொருள் 01 :**

நகராட்சி பகுதிக்கு உட்பட்ட அனைத்து தெருக்களிலும் சாலையோர வியாபாரம் செய்யும் அனைத்து சாலையோர வியாபாரிகளை பயோ-மெட்ரிக் முறையில் கணக்கெடுப்பு எடுக்கவும், அவர்களின் புவிசார் தகவல் (Geo Information) பதிவு செய்து அவற்றுக்கு Geo-Mapping செய்யவும், அவற்றைக் கொண்டு சாலையோர வியாபாரிகளுக்கு QR-Code உடன் கொண்ட பயோ-மெட்ரிக் அடையாள அட்டை, விற்பனை சான்றிதழ், சாலையோர வியாபாரிகளின் நகர எல்லைக்குள்ளான விற்பனை திட்டம்(Street Vending Plan), உருவாக்கி தரவும், விரிவான செயல்முறைத் திட்டம் ஏற்படுத்தி தரவும், மேலே குறிப்பிட்டுள்ள அனைத்து தகவல்களுக்கான தரவுகளை (MIS-Database) முழுமையாக (Soft and Hard Copy) சமர்ப்பிக்கவும் ஆன்லைன் மூலம் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 20789/2021/UPA1 நாள் 16–06–2022ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின் படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் பெறப்பட்டன, பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் BHARATH HR CONSULTANCY, Coimbatore நிறுவனம் RFP Cost தொகை வங்கி வரைவோலை இணைக்கவில்லை என்பதால், மேற்காணும் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டுவிட்டது. MIRIFICAL CAREERS PVT LTD, Coimbatore நிறுவனத்தின் தொழில் நுட்பத் தகுதி 60 சதவீதம் பெறப்பட்டு நிறுவனம் தகுதி அடைந்துள்ளது என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கும், MIRIFICAL CAREERS PVT LTD நிறுவன ஒப்பந்தப்புள்ளித் தொகை மன்றத்தின் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| Sl.No | Activity | No of Vendors | Cost Per Vendor |
|---|---|---|---|
| 1 | Survey of Street Vendors (pro- Rata Basis Includes all Activities mentioned in Annexure – c of RFP) | 1 | 700 |

அலுவலகக் குறிப்பு :

1. Mirifical Careers Pvt Ltd, Coimbatore நிறுவன ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ.700 அதிகமாா உள்ளதாகத் தெரிவித்து ஒப்பந்தப்புள்ளித் தொகையினை குறைப்பு செய்திட தெரிவிக்கப்பட்டதன் படி விலை குறைப்பு செய்து ரூ.650 எனக் கடிதம் வழங்கியுள்ளதால், மேற்காணு. நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளித் தொகையினை மன்றம் அங்கீகரித்து அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மானம் எண் 113 ; மன்ற அனுமதி வழங்கப்பட்டது.</u>**

**<u>மன்றப் பொருள் 02 :</u>**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடிதம் எண் 1540/2015/ஆ2 நாள் 23–05–2022 ல் தூய்மை இந்தியய திட்டம் **நுண் உர மையத்தில் தினசரி வார்டு வாரியாக சேகரிக்கப்படும், வரப்பெறும் மக்கும் கழிவுகளை கணக்கிட்டு பட்டியலில்**

இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் நிரப்புதல் செய்து கணக்கீடு செய்ய வேண்டும் என்ற நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் உத்தரவின் படியும் MCCயில் சேகரிக்கப்படும் மக்கும் கழிவுகளை தினம் தோறும் கணக்கீடு செய்யும் பொருட்டு முதற்கட்டமாக 10 புத்தகம் அவசர அவசியம் கருதி அச்சுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது, அதற்கான செலவினம் ரூ.2000 மற்றும் நுண் உர மையத்தில் சிறு பழுது பணிகள் மேற்கொண்டமைக்கு ரூ.1250 தொகைகள், மற்றும் ODF+ சான்று பெற சமுதாய கழிப்பறை பொதுக் கழிப்பறைகளை சுத்தம் செய்த வகைக்கும், எலக்ட்ரிக் சாமான்கள் , விழிப்புணர்வு பேனர்கள் அச்சடித்தமைக்கும் செலவினம் ரூ.4380 ஆக மொத்தம் 7630 வருவாய் மற்றும் மூலதனநிதியில் இருந்து வழங்குவதற்கும், மேலும் நகரங்ளை தூய்மைக்கான மக்கள் இயக்கம்விழிப்புணர்வு நோட்டீஸ்கள் கலர் ஜெராக்ஸ்கள், கோவிட் தடுப்பூசி பேர், மரக்கன்று நடுதல் விழிப்புணர்வு தூய்மை மக்கள் இயக்கம் விழிப்புணர்வு பேனர் தயார் செய்தல் மற்றும் தூய்மைக்கான மக்கள் இயக்கம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட இதர பணிக்கு ஆக மொத்தம் செலவினம் ரூ.11,630 தொகையினை இவ்வலுவலக சுகாதார ஆய்வாளர் திரு.பழனிச்சாமி அவர்களால் செலவிடப்பட்டுள்ளதால், தூய்மைக்கான மக்கள் இயக்கம் திட்டத்தின் கீழ் செலவுத் தொகைகள் வழங்கிடவும், வருவாய் மற்றும் மூலதன நிதியில் ரூ.7630 தொகையினை சுகாதார ஆய்வாளர் திரு.பழனிச்சாமி அவர்களுக்கு வழங்கிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு ;

1. ரூ.7630/– தொகையினை வருவாய் மற்றும் மூலதனநிதியில் இருந்து திரு.பழனிச்சாமி சுகாதார ஆய்வாளருக்கு வழங்குவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. ரூ.11,630 தொகையினை Swachh Bharat Mission (U) 2.0 தூய்மைக்கான மக்கள் இயக்கம் திட்டத்தின் கீழ் திரு.பழனிச்சாமி சுகாதார ஆய்வாளருக்கு வழங்குவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண் 114 ; அலுவலக குறிப்புக்கு மன்ற அனுமதி வழங்கப்பட்டது.**

**மன்றப் பொருள் 03 :**

செங்கோட்டை நகராட்சி குடிநீர் விநியோகத்திற்கான (அடிபம்பு) உதிரி பாகங்கள் டான்சி நிறுவனம், திருச்சி மூலம் இந்நகராட்சி கொண்டு வந்த வகைக்கு வண்டி வாடகை ரூ.13,000 APS Coach, Trichy க்கு வழங்க வேண்டியுள்ளது. மேற்கண்ட தொகையினை குடிநீர் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.
அலுவலகக் குறிப்பு ;

1. குடிநீர் நிதியில் வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண் 115 ; அனுமதி வழங்கப்பட்டது.**

**மன்றப் பொருள் 04 :**

மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் சிறப்பு திட்டமான நெகிழி பயன்பாட்டை தவிர்த்து 'மீண்டும் மஞ்சள் பை ' திட்டத்திற்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நோக்கில் கலர் நோட்டீஸ்கள், கலர் ஸ்டிக்கர்கள் அச்சடிக்கும் பணிகள் மேற்கொள்ள இந்நகர் மன்றத் தீர்மானம் எண் 69 மற்றும் 70 நாள் 20-05-2022ல் ஒப்புதல் வழங்கியுள்ளதன் படி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன, ஒப்பந்த கேள்வித் தொகை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணிகளின் விபரம் | Kovilpatti Small Scale Industries Service Industrial Co op Society Ltd, Kovilpatti (ரூ) | The Thoothukudi District Hi-tech Printing and Allied Service Industrial Co-operative Society Ltd (ரூ) | Tirunelveli District Multi Purpose Service Industrial Co operative Society Ltd (ரூ) |
|---|---|---|---|---|
| 1 | நெகிழி பயன்பாட்டை ஒழித்து மஞ்சப் பையினை பயன்படுத்தும் விழிப்புணர்வு மன்டி கலர் ஸ்டிக்கர்கள் அச்சுப் பணிகள் | 15.00 | 15.50 | 16.00 |
| 2 | கொரோனா விழிப்புணர்வு - முகக் கவசம் கட்டாயம் குறித்த மல்டி கலர் ஸ்டிக்கர்கள் | 15.00 | 15.50 | 16.00 |
| 3 | நெகிழி பயன்பாட்டை ஒழித்து மஞ்சப் பையினை பயன்படுத்தும் விழிப்புணர்வு மல்டி கலர் நோட்டீஸ்கள் | 7.00 | 7.50 | 8.00 |

அலுவலகக் குறிப்பு ;

1. பெறப்பட்ட 3 ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கியுள்ள Kovilpatti Small Scale Industries Service Industrial Co op Society Ltd, Kovilpatti நிறுவனத்திற்கு பணிகள் மேற்கொள்ள அனுமதி வ.ழுங்கலாம்.

**தீர்மானம் எண் 116 ; அனுமதி வழங்கப்பட்டது.**

**மன்றப் பொருள் 05 :**

செங்கோட்டை நகராட்சிக்குச் சொந்தமான கீழ்கண்ட ஆண்டு குத்தகை இனம் 31-03-2022 உடன் குத்தகை காலம் முடிவடைந்த நிலையில் கீழ்காணும் குத்தகை இனத்தினை ஒப்படைக்கும் நாள் முதல் 3 வருடத்திற்கு மட்டும் அனுபவித்துக் கொள்ள மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு ஒரு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் பெறப்பட்டுள்ளன, பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

20–07–2022ம் தேதி நடைபெற்ற பொது ஏலம் கேள்வி ;

| வ.எண் | குத்தகை இனம் | குத்தகைதாரர் பெயர் மற்றும் முகவரி | ஏலக் கேள்வி ரூ. |
|---|---|---|---|
| 1 | செங்கோட்டை நகராட்சி பேருந்து நிலையத்தில் உள்ள கட்டணக் கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம். | பொது ஏலத்தில் கலந்து கொள்ள எவரும் முன்வரவில்லை | |
| 2 | செங்கோட்டை நகராட்சி ஆடு அறுவை நிலையத்தில் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம். | | |

20–07–2022ம் தேதி நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி கேள்வி ;

| வ.எண் | குத்தகை இனம் | குத்தகைதாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி கேள்வி ரூ. |
|---|---|---|---|
| 1 | செங்கோட்டை நகராட்சி பேருந்து நிலையத்தில் உள்ள கட்டணக் கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம். | திரு.சே.செய்யது மசூது, த/பெ.எம்.சேக் அப்துல் காதர், 3/49,எம் ஆர் ஜயர் லைன், விசுவநாதபுரம், செங்கோட்டை | ரூ.71,000/- |
| 2 | செங்கோட்டை நகராட்சி ஆடு அறுவை நிலையத்தில் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம். | ஒப்பந்தப்புள்ளி ஏதும் பெறப்படவில்லை. | |

அலுவலகக் குறிப்பு ;

செங்கோட்டை நகராட்சி பேருந்து நிலைய வளாகத்தில் உள்ள கட்டணக் கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமத்திற்கு29–10–2021, 21–12–2021, 05–01–2022, 28–02–2022, 14–03–2022, 24–03–2022, 01–04–2022, 11–04–2022, 20–04–2022, 07–05–2022, 26–05–2022, 09–06–2022 ஆகிய தினங்களில் பொது ஏலம் மூலமாக குத்தகைக்கு விட அறிவிப்பு கடிதம் வெளியிடப்பட்டதில் எவரும் கலந்து கொள்ள முன்வரவில்லை என்பதாலும், 01–04–2022 முதல் தற்பொழுது வரை துறை ரீதியாக வசூல் செய்யப்பட்டு வருகிறது. மேலும் 2019–2020ம் ஆண்டு நடைபெற்ற பொது ஏலத்தில் உயர்ந்த கேள்வித் தொகையான ரூ.67550க்கு அனுபவித்துக் கொள்ள வழங்கப்பட்டநிலையில், கடந்த மூன்று ஆண்டு சராசரித் தொகையான ரூ.70,984/- விட கூடுதலாக திரு.சே.செய்யது மசூது, செங்கோட்டை என்பவரால் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளதால் ஒப்படைக்கும் நாள் முதல் 31–03–2025 வரை மட்டும் அனுபவித்துக் கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண் 117 ; திரு.செய்யது மசூது அவர்களுக்கு ஏலக்கேள்வி அனுமதி வழங்கப்பட்டது.**

**மன்றப் பொருள் 06 :**

செங்கோட்டை நகராட்சி பகுதியில் செயல்பட்டு வரும் (FSTP) கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் 2022–2023ம் ஆண்டு வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ரூ.9,50,000க்கு உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு ;

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் 118 ; அனுமதி வழங்கப்பட்டது.</u>**

**மன்றப் பொருள் 07;**

செங்கோட்டை நகராட்சி வார்டு எண் 11 முத்தழகியம்மன் கோவில் தெருவின் நடுவில் நிற்கும் மின்கம்பம் எண் 36, வார்டு எண் 24 வல்லம் ரோடு மின் கம்பம் மற்றும் இந்நகராட்சி பகுதிகளில் பொது மக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறாக இருக்கும் மின் கம்பங்களை கள ஆய்வு செய்து மேற்படி மின்கம்பங்களை மாற்றியமைக்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.1,00,000/− தொகையினை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு ; மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மானம் எண் 119 ; மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.</u>**

**மன்றப் பொருள் 08;**

செங்கோட்டை நகராட்சிக்குச் சொந்தமான பொது சுகாதார வாகனம் TN76P8356 வண்டிக்கு தகுதி சான்று 15−07−2022 உடன் முடிவடைந்து விட்டதால், பழுது பணிகள் மேற்கொண்டு உடன் தகுதிச் சான்று பெற, மேற்காணும் வாகனத்தினை உடன் பழுது பணிகள் மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிடுவதற்கும், அதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.72,000/- க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு ;

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மானம் எண் 120 ; மன்ற அனுமதி வழங்கப்பட்டது.</u>**

**மன்றப் பொருள் 09;**

செங்கோட்டை நகராட்சியின் 10 KVA 3 phase Generator−ன் Air Filter, oil & Valve tube, door grill ஆகியவை பழுதடைந்துள்ளது. எனவே மேற்படி ஜெனரேட்டரின் பழுதுகள் நீக்கம் செய்ய பராமரிப்பு பணி மேற்கொள்ள உத்தேச செலவு ரூ.11541/− ஆகும். ஜெனரேட்டர் பழுது நீக்கவும், அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் 121 ; மன்ற அனுமதி வழங்கப்பட்டது.</u>**

**மன்றப் பொருள் 10;**

செங்கோட்டை நகராட்சி வார்டு எண்.19 கே.சி. ரோடு பகுதியிலுள்ள சிறு பாலங்கள் மிகவும் பழுதடைந்து பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது. மேற்படி பகுதியில் மழைக் காலங்களில் வாறுகாலில் தண்ணீர் நிரம்பி தெருக்களில் செல்கிறது. எனவே, பொதுமக்கள் நலன் கருதி மேற்படி பகுதியில் புதியதாக சிறுபாலம் அமைக்க ரூ.50,000/- க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ளவும் அதற்கான செலவித்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்காலம்
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் 122 ; மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.</u>**

**மன்றப் பொருள் 11;**

செங்கோட்டை நகராட்சியில் கீழ்காணும் பணியினை மேற்கொள்ள 18-8-2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும்.

| பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தத்தாரர் பெயர் மற்றும் ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| செங்கோட்டை நகராட்சி வார்டு எண் 19 கேசி ரோடு பகுதியிலுள்ள சிறுபாலங்கள் பழுதடைந்துள்ளதால் புதிதாக சிறுபாலங்கள் அமைத்தல் | 0.50 | 1) திரு.M.அசன்கனி<br>மதிப்பீட்டை விட 0.01% குறைவு<br>2) திரு.M.பரமசிவம்<br>மதிப்பீட்டை விட 0.48% அதிகம் |

அலுவலக குறிப்பு :

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.01% குறைவான விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.அசன்கனி என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் 123 ; மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.</u>**

**மன்றப் பொருள் 12;**

செங்கோட்டை நகராட்சியில் கீழ்காணும் குடிநீர் திட்டப் பணியினை மேற்கொள்ள 10.06.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது..

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தக்காரர்கள் பெயர் (ம) ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1. | செங்கோட்டை நகராட்சி பகுதியின் அனைத்து வார்டுகளிலும் உள்ள ஆழ்குழாய் கிணறுகளின் கைப்பம்புகளில் ஏற்படும் பழுதுகளை 2022-2023ம் ஆண்டில் வருடாந்திர பராமரிப்பு பணி மேகொள்னளுதல் | 2.00 | 1) திரு.M.பரமசிவம் மதிப்பீட்டு விகிதம் |
| | | | 2) திரு.M.பரமசிவன் மதிப்பீட்டை விட 2.88% அதிகம் |
| 2. | செங்கோட்டை நகராட்சி 24 வார்டுகளிலும் குடிநீர் விநியோக குழாய்கள், பிரதான குழாய்கள், பகிர்மான குழாய்கள் மற்றும் இது தொடர்பான பணிகள் வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | 4.00 | 1) திரு.M.அசன்கனி மதிப்பீட்டு விகிதம் |
| | | | 2) திரு.டி.ஆபேல் ஜெயசீலன் மதிப்பீட்டை விட 6.74% அதிகம் |
| 3. | செங்கோட்டை நகராட்சி பகுதியிலுள்ள சிறுமின் விசை மோட்டார்கள் மற்றும் திறந்தவெளி கிணற்றிலுள்ள மின் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை 2022-2023ம் ஆண்டிற்கு வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | 5.00 | 1) திரு.S.பரமசிவம் மதிப்பீட்டு விகிதம் |
| | | | 2) திரு.M.பரமசிவன் மதிப்பீட்டை விட 2.19% அதிகம் |

அலுவலக குறிப்பு :

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1,2, மற்றும் 3க்கான பணிகளுக்கு மதிப்பீட்டு விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள குறைந்த ஒப்பந்தகாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 124 ; அனுமதி வழங்கப்பட்டது.**

**மன்றப் பொருள் 13;**

நமக்கு நாமே திட்டம் 2021-2022ன் கீழ் இந்நகராட்சி பகுதியில் 6 எண்ணங்கள் உயர்கோபு மின் விளக்குகள் அமைக்கப்பட உள்ளது. மேற்படி மின் விளக்குகளுக்கு மின் இணைப்பு வழங்க மின் விளக்கு 1ற்கு ரூ.2400/- வீதம் 6 மின் விளக்குகளுக்கு (6x2400) ரூ.14400/- தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்தப்பட வேண்டும் என தமிழ்நாடு மின் பகிர்மான (ம) விநியோக கழகம் மூலம் கேட்பு வரப்பெற்றுள்ளது எனவே, மேற்படி தொகையினை வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்காலம்

2. அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை மின்வாரியத்திற்கு செலுத்தியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் 125 ; அனுமதி வழங்கப்பட்டது.</u>**

**மன்றப் பொருள் 14;**

நகராட்சிக்கு சொந்தமான சாலைகள், கட்டிடங்கள், பேருந்து நிலையங்கள், பூங்காக்கள் மற்றும் விளையாட்டு திடல்கள் போன்றவற்றிற்கு பெயர் வைப்பது மற்றும் மாற்றுவது தொடர்பான முன்மொழிவுகளை நகராட்சி நிர்வாக இயக்குநர், வழியாக அரசிற்கு அனுப்பி அனுமதி பெற்ற பின்னரே உள்ளாட்சி அமைப்புகளின் சொத்துகளுக்கு பெயரிடுவது மற்றும் பெயர் மாற்றம் குறித்த தீர்மானங்கள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தி நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.ம) துறை, அரசாணை (நிலை) எண்.98, நாள்.11.07.2022 வெளியிடப்பட்டுள்ளது மேற்படி அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**<u>தீர்மானம் எண் 126 ; பதிவு செய்ய அனுமதி வழங்கப்பட்டது.</u>**

**மன்றப் பொருள் 15;**

நகர்மன்ற தலைவர் அவர்களால் முன்மொழியும் தீர்மானம்,

இந்நகர ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையம் கட்டிடம் கட்டுவதற்கு செங்கோட்டை நகர பகுதியில் போதிய இடம் இல்லை என்பதால் ஆரம்ப சுகாதார மைய கட்டிடம் கட்டுவதற்கு இயலாத நிலையில் உள்ளதாகவும் எனவே நகராட்சி வீரவாஞ்சிநாதன் மணிமண்டபம் பின்பகுதியில் உள்ள இடத்தில் நகர்புற ஆரம்ப சுகாதார மையம் கட்டிடம் கட்டினால் அனைத்து பகுதி மக்களும் பயன்படும் வகையில் மத்திய பகுதியாக அமையும் என்பதோடு பெரும்பாலான ஏழை எளிய மக்கள் பயன்படும் வகையில் அமையும் ஆகவே வாஞ்சிநாதன் மணிமண்டபம் பின்பகுதியினை நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையம் கட்டிடம் கட்டிட இடம் வழங்கிட மன்றத்தின் அனுமதிவேண்டி

**<u>தீர்மானம் எண் 127 ; துணைத் தலைவர் வழிமொழிய தீர்மானம் ஏற்று ஒரே மனதாக அனுமதி வழங்கப்பட்டது.</u>**

**மன்றப் பொருள் 16 ;**

9 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களால் முன்மொழியும் தீர்மானம்

1. துப்புரவு பணியாளர்கள் குடியிருப்பு பகுதியின் சுற்றுச் சுவர் கட்டித் தரவும், வடிகால் நீரோடை அமைத்துத் தரவும் வேண்டி.

**<u>தீர்மானம் எண் 128 ; 7வது வார்டு மன்ற உறுப்பினர் வழிமொழிய தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.</u>**

**மன்றப் பொருள் 17 :**

1வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களால் முன் மொழியும் தீர்மானம்

செங்கோட்டை நகராட்சி மக்கள் தொகை 27000 ஆகும், மொத்த பரப்பளவு 2.68 ச.கிமீ மொத்த வீடுகளின் எண்ணிக்கை சுமார் 10,000 ஆகும், 1921 முதல் நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. சட்டநாதன் கரையாளர் MLA அவர்கள் கேரள அரசிடமிருந்து பிரிந்து நகராட்சியாக இருந்து வருகிறது. போதிய வருமானம் இல்லாத காரணத்தினால் பக்கத்தில் உள்ள பெரியபிள்ளை வலசை கிராம பஞ்சாயத்து, புதூர் பஞ்சாயத்து, பிரானூர் பார்டர் பஞ்சாயத்து மற்றும் வல்லம் ஊராட்சி ஆகியவற்றை செங்கோட்டை நகராட்சியில் இணைக்க தீரமானம் நிறைவேற்றி சம்மந்தப்பட்ட துறைக்கு பரிந்துரை செய்ய வேண்டி.

**தீர்மானம் எண் 129 ; துணைத் தலைவர் வழிமொழிய தீர்மானம் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.**

**மன்றப் பொருள் 18 :**

12வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களால் முன் மொழியும் தீர்மானம்

செங்கோட்டை நகரம் 12 வது வார்டில் உள்ள (மேலூர்) பயணிகள் நிழற்குடை தற்போது மக்களுக்கு பயன்பாடு இல்லாமல் உள்ளது. மேற்படி கட்டிடத்தை சில சமுக விரோதிகள் சட்ட விரோத செயல்களுக்கு பயன்படுத்துகின்றனர்.மேற்படி கட்டிடத்தால் எந்த பயனும் இல்லை. எனவே மேற்படி கட்டிடைத்தை அகற்றவும்,பள்ளிக்கூடத்திற்கு மேல்புறம் உள்ள சாலை, பாலம் மற்றும் வாறுகால் சிதிலமடைந்துள்ளது. கடந்த பத்து ஆண்டுகளாக இந்த சாலை, பாலம் மற்றும் வாறுகால் இடிந்த நிலையில் உள்ளது, மேற்படி இரண்டு பணிகளையும் செய்து தர வேண்டி.

**தீர்மானம் எண் 130 ; 7வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

நகர்மன்ற தலைவர்
செங்கோட்டை நகரமன்றம்

பெறுநர்,

நகராட்சி நிர்வாக இயக்குநர்,சென்னை

மாவட்ட ஆட்சித்தலைவர் தென்காசி

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி